தினமணி

# வறட்சியால் குறுகிய கால சாகுபடிப் பயிர்களுக்கு மாறும் விவசாயிகள்

-பீ.ஜெபலின் ஜான்-

First Published : 19 Jul 2012 03:17:35 AM IST



வறட்சி காரணமாக மஞ்சள் பயிர்களுக்கு இடையே ஊடுபயிராகப் பயிரிடப்பட்டுள்ள வெங்காயச் செடிகள்.

ஈரோடு: பவானிசாகர், மேட்டூர் அணைகளில் நீர்மட்டம் குறைந்துள்ளதால் ஏற்பட்டுள்ள வறட்சியால் ஈரோடு மாவட்ட விவசாயிகள், குறுகிய கால பயிர்களைப் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால், மஞ்சள், கரும்பு, நெல் சாகுபடிப் பணிகள் 80 சதவீதம் வரை குறைந்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி பாசனத்திலும், தடப்பள்ளி- அரக்கன்கோட்டை, காலிங்கராயன் ஆகிய பழைய பாசனங்களிலும் சேர்த்து மொத்தமாக 2.5 லட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் உள்ளன. பொதுவாக, கரும்பு மற்றும் மஞ்சள், வாழை, மரவள்ளி போன்ற ஆண்டுப் பயிர்களை அதிகமாகப் பயிரிடுவது வழக்கம்.

32.8 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட கீழ்பவானி அணையில் இப்போது 2.5 டி.எம்.சி. நீர் மட்டுமே உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள மின் உற்பத்தி செய்யும் அணைகளின் மொத்தக் கொள்ளளவு 14 டி.எம்.சி. அவற்றில் இப்போதைய நீர் இருப்பு 2 டி.எம்.சி. மட்டும்தான்.

கோவை, திருப்பூர் குடிநீர்த் திட்டங்களுக்குக்கூட இது போதுமானது அல்ல. இதனால், கீழ்பவானி அணைக்கு அங்கிருந்தும் இனிமேல் நீர் கொண்டுவர இயலாது. தென்மேற்குப் பருவமழை இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு இதுவரை பொழியவில்லை. ஜூன் 1-ம் தேதி

தொடங்கியிருக்க வேண்டிய பருவமழை, தூறலோடு நின்றுவிட்டது. 40 நாள்கள் ஆகியும்கூட பல இடங்களில் மழை தீவிரமடையவில்லை.

நடப்பு ஆண்டில் பருவமழை குறையக்கூடும் என்று வேளாண் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இதுபோன்ற பல்வேறு காரணங்களால் பாசன நீருக்கு ஈரோடு மாவட்டத்தில் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் என்பதை இங்குள்ள விவசாயிகள் முன்கூட்டியே உணர்ந்துள்ளனர். இதன் காரணமாக ஆண்டுப் பயிரை பயிரிடாமல் குறுகிய காலப் பயிர்களை பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கொடுமுடி வட்டாரத்தில் பெரும்பாலான மஞ்சள் விவசாயிகள், இப்போது மக்காச்சோளம் பயிரிட்டு வருகின்றனர். கடந்த ஏப்ரல் 15-ம் தேதி தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இப்போது மஞ்சள் பயிர் முளைப் பருவத்தில் உள்ளது. காலிங்கராயன் பாசனத்துக்கு ஜூன் 15-ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. மஞ்சள் நடவுப் பணி முழுமையாக முடியாத நிலையில் உள்ளது.

மஞ்சளுக்கு ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வரை விவசாயிகள் செலவு செய்து பயிரிட்டுள்ளனர். கிட்டத்தட்ட 3 பாசனங்களிலும் சேர்த்து இதுவரை 20,000 ஏக்கர் மஞ்சள் சாகுபடி நடைபெற்றுள்ளது. அணை தண்ணீர் இன்னும் ஒரு வாரத்துக்கு மட்டுமே திறக்கப்படும் நிலையில், பருவமழை பெய்தால் மட்டுமே இனி பயிரைக் காப்பாற்ற முடியும். இல்லையெனில் விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படும். இப் பாசனங்களில் உள்ள நெல், மஞ்சள் பயிர்களை எப்படிக் காப்பாற்றுவது என்ற கேள்விக்குறி விவசாயிகள் மனதில் எழுந்துள்ளது.

இதுகுறித்து, தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் சுபி.தளபதி கூறியது:

தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்தில் நெல், மஞ்சள் பயிர்களைக் காப்பாற்ற முடியாத நிலை உள்ளது. இதனால், 80 சதவீத விவசாயிகள் இந்த ஆண்டில் சாகுபடி செய்வதை நிறுத்திவிட்டனர். நெருக்கடியில் சிக்கியுள்ள விவசாயிகளுக்கு அரசு இழப்பீடு வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் செ.நல்லசாமி கூறியது:

2002-03-ம் ஆண்டைப்போல 10 ஆண்டுகளுக்குப் பின் கடுமையான வறட்சி ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கிவிட்டன. இருக்கும் தண்ணீரை வைத்து கால்நடை தீவனப்பயிர் பயிரிடுவதற்கே ஆர்வம் காட்டி வருகின்றனர். ஒரு ஏக்கர் நெல்லுக்குத் தேவைப்படும் தண்ணீரைக் கொண்டு 4 ஏக்கர் பரப்பில் ராகி, சோளம், கம்பு, வரகு, சாமை, திணை போன்ற சிறுதானிய பயிர்களைப் பயிரிட முடியும்.

இதற்கான விதை உள்ளிட்ட வகைகள் தாராளமாக கிடைக்க வேளாண் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு மானியமும் வழங்க வேண்டும். போதிய அளவு நீர் இருந்திருந்தால் வழக்கமாக 40,000 ஏக்கர் பரப்பளவில் மாவட்ட அளவில் மஞ்சள் சாகுபடி நடந்திருக்கும்.

ஆனால், 20,000 ஏக்கர்தான் பயிரிட்டுள்ளனர். இந்த ஆண்டு இதுவரை 15,000 ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்துள்ளனர். இந்தப் பயிரின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. இதற்கு மேல் சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்கு விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர் என்றார்.

மானாவாரி கேழ்வரகு சாகுபடியில் அதிக மகசூல் பெற...

First Published : 19 Jul 2012 12:51:39 AM IST



தருமபுரி: மானாவாரி கேழ்வரகு சாகுபடியில் உரிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்தால் அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

கிராமப்புற மக்களின் உணவு வகைகளில் குறுதானியத்தின் முக்கியப் பயிராக கேவழ்ரகு முக்கிய இடம் வகிக்கிறது.

கேழ்வரகில் செரிமானத்துக்கு உதவும் நார்ச் சத்து, வைட்டமின்கள், தாதுக்கள், கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் பிற நுண்ணூட்டச் சத்துகளும் உள்ளன. உடல் பருமன் மற்றும் சர்க்கரை நோய்களை கட்டுக்குள் வைக்கும்.

தமிழகத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், ஈரோடு, வேலூர் மாவட்டங்களில் அதிக அளவில் (சுமார் 80 சதம்) மானாவாரியாக கேழ்வரகு சாகுபடி செய்யப்படுகிறது.

பருவம்: மானாவாரிப் பயிராக ஆடி, புரட்டாசிப் பட்டங்களிலும், இறவைப் பயிராக சித்திரை, ஆடி, மார்கழி பட்டங்களிலும் பயிரிடலாம்.

ரகங்கள்: ஆடிப் பட்டத்தில் கோ-13, கோ(ரா) 14, பையூர்(ரா) 1, பையூர்(ரா) 2 ஆகிய ரகங்களைப் பயிரிடலாம்.

மார்கழி, சித்திரைப் பட்டங்களில் கோ-13, கோ(ரா) 14, டிஆர்ஒய் 1 ரகங்கள் பயிரிடலாம்.

புரட்டாசிப் பட்டத்தில் கோ-13, கோ(ரா) 14, பையூர் 1, பையூர்(ரா) 2 ரகங்கள் பயிரிடலாம்.

**ஊடு பயிர்:** கேழ்வரகுடன் துவரை அல்லது மொச்சை, உளுந்து உள்ளிட்ட பயறு வகைப் பயிர்களை 8:2 விகிதத்தில் ஊடுபயிராகப் பயிரிடுவதன் மூலம் அதிக மகசூலுடன், வருமானமும் கிடைக்கிறது.

உழவியல் நிர்வாகம்: சித்திரை-வைகாசி மாதங்களில் இறக்கை கலப்பையைக் கொண்டு 2 முறையும், விதைப்பதற்கு முன்பு ஒரு முறையும் உழவு செய்ய வேண்டும்.

ஹெக்டேருக்கு 25 கிலோ விதையை கை விதைப்பு முறையில் பரவலாகத் தூவலாம். ஆனால், பயிரின் வளர்ச்சி சீராக இருக்காது. விதைப்பானைக் கொண்டு வரிசைக்கு வரிசை 22.5 செ.மீ. இடைவெளியிலும் செடிக்கு, செடி 10 செ.மீ. இருக்கும் வகையில் விதைக்க வேண்டும். இந்த முறையில் விதைப்பு செய்தால் ஒரு ஹெக்டேருக்கு 15 கிலோ விதை போதுமானது.

**விதை நேர்த்தி:** அப்ஸ்ஃஸ்பைரில்லம் 600 கிராம், பாஸ்போ பாக்டீரியா அல்லது அசோஸ்பாஸ் நுண்ணுயிர் 600 கிராம் உரங்களை ஒரு ஹெக்டேருக்கான விதையுடன் கலந்து பின்னர் விதைக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதைகளை ஒரு சதம் பொட்டாசியம் குளோரைடு ரசாயனத்தில் 6 மணி நேரம் ஊற வைத்து பிறகு 5 மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். இத்தகைய முறையைப் பின்பற்றினால் பயிர் வறட்சியைத் தாங்கி வளரும்.

**உர நிர்வாகம்:** மண் பரிசோதனை செய்து உரமிட வேண்டும். இல்லையெனில் பரிந்துரைக்கப்பட்ட உர அளவான தழை, மணி, சாம்பல் சத்துக்குளை ஹெக்டேருக்கு 60:30:30 கிலோ விகிதத்தில் இட வேண்டும். அடி உரமாக மணி, சாம்பல் சத்துகளை முழுமையாக இட வேண்டும்.

தழைச் சத்தை மட்டும் பாதி அளவு இட்டு, மீதமுள்ளவற்றை சரி பாதியாக 23, 30, 40-வது நாள்களில் இட வேண்டும்.

**களை நிர்வாகம்:** 20 அல்லது 25 நாளில் கையினால் ஒருமுறை களை எடுக்க வேண்டும். இல்லையெனில் 2,4-டி சோடியம் உப்பை ஹெக்டேருக்கு 0.75 கிலோ என்ற விகிதத்தில் தெளிப்பு செய்ய வேண்டும்.

**நோய்கள்:** குலைநோய் மிக முக்கியமானதாகும். கதிர் விரல், கதிரின் கழுத்தில் தோன்றும் போது விளைச்சல் அதிகம் பாதிக்கப்படும்.

கட்டுப்பாடு: எடிபன்பாஸ் (0.1 சதம்) அல்லது சாஃப் (0.2 சதம்) இவற்றில் ஏதேனும் ஒன்றை 50 சதம் பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.


பருவநிலை மாற்றுத்துக்கேற்ப படைப் புழுக்கள், சாறு உறிஞ்சிகள், தண்டு துளைப்பான்கள், கதிர் நாவாய் புழு ஆகியவை பயிரில் தென்படும். இவற்றைக் கட்டுப்படுத்த இமிடோகுளோபிரிட் (0.1சதம்) என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

**மகசூல்:** ஹெக்டேருக்கு சுமார் 2 ஆயிரம் கிலோ முதல் 2,500 கிலோ வரை தானியம், 5 ஆயிரம் கிலோ முதல் 8 ஆயிரம் கிலோ வரை தட்டையைப் பெறலாம். எனவே, விவசாயிகள் உரிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து மானாவாரியில் அதிக மகசூல் பெறலாம்.

மேலும், விவரங்களுக்கு அருகாமையில் உள்ள வட்டார வேளாண்மை அலுவலகங்கள், வேளாண்மை அறிவியல் நிலையங்களைத் தொடர்பு கொள்ளலாம் என வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

## ஆடிப்பட்ட பயிர்களுக்கான விலை முன்னறிவிப்பு

First Published : 19 Jul 2012 12:50:43 AM IST



மக்காச்சோளம் எள் சின்ன வெங்காயம் நிலக்கடலை

விருத்தாசலம்: ஆடிப்பட்ட பயிர்களுக்கான விலை முன்னறிவிப்பை வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கடலூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் நா.தனவேல் மற்றும் விருத்தாசலம் கோட்ட வேளாண்மை அலுவலர் ச.அமுதா ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழகத்தில் மானாவாரிப் பயிர்களுக்கு ஆடிப் பட்டம் முக்கியமானதாகும். தென்மேற்கு பருவமழை இப்பட்டத்தின் உற்பத்தியை தீர்மானிக்கிறது. இவ்வருடம் பருவமழை இயல்பாக இருக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. தானியப் பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள் மற்றும் காய்கறிகள் இப்பட்டத்தில் பயிரிடப்படும் முக்கிய பயிர்களாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் செயல்பட்டுவரும் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது மக்காச்சோளம், எள், சின்னவெங்காயம் மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கு அறுவடையின்போது கிடைக்கும் விலைகளுக்கான சந்தை ஆய்வை மேற்கொண்டு விவசாயிகள் உற்பத்தி முடிவுகளை எடுக்க ஏதுவாக அவற்றை அறிவித்துள்ளது.

**மக்காச்சோளம்:** கர்நாடக மாநிலத்திலிருந்து ஆகஸ்ட் மாத இறுதியில் புதிய மக்காச்சோளம் வரத்தொடங்கும். அது வரை விலை குவிண்டாலுக்கு ரூ.1100 முதல் 1500 வரை இருக்கும். மக்காச்சோளத்துக்கான குறைந்தபட்ச ஆதார விலையை இந்திய அரசு நடப்பு கரீப் பருவத்தில் குவிண்டாலுக்கு ரூ.980 லிருந்து 1175 ஆக உயர்த்தியுள்ளது. இச்சூழ்நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் உடுமலை சந்தையில் கடந்த 18 ஆண்டுகள் நிலவிய மக்காச்சோள விலையை ஆய்வு செய்து மற்றும் வர்த்தகர்களிடமும் ஆய்வு நடத்தியது. இதன்படி ஆடிப்பட்ட பயிர் அறுவடை சமயம் அதாவது அக்டோபர் முதல் டிசம்பர் 2012-ல் மக்காச்சோளம் குவிண்டாலுக்கு ரூ.1100 முதல் 1150 வரை விற்கும் என்று கணித்துள்ளது. நல்ல ஏற்றுமதி வாய்ப்பு மற்றும் உள்நாட்டு தேவை ஆகிய காரணங்களால் மக்காச்சோள விலை குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை ஒட்டி இருக்கும்.

**எள்:** ஆடிப்பட்டத்தில் எள் விதைப்பானது ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் செய்யப்பட்டு செப்டம்பர்- டிசம்பர் மாதங்களில் சந்தைக்கு வரும். கடந்த ஆண்டு கரீப் பருவத்தில் உற்பத்தி சுமார் 29.20 லட்சம் டன்னாக இருந்தது. கடந்த ரபி பருவத்தில் எள்ளுக்குக் கிடைத்த நல்ல விலையால் (ரூ.5500-6200 குவிண்டால்) இந்த கரீப் பருவத்துக்கான (2012-13) குறைந்தபட்ச ஆதார விலையை குவிண்டாலுக்கு ரூ.3400 ஆக இருந்ததை ரூ.4200 ஆக (கடந்த ஆண்டைவிட 20 சதவீதம் அதிகம்) சமீபத்தில் அறிவித்தது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைத் தகவல் மையம் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் 12 ஆண்டு விலைகளை ஆய்வு செய்ததில் அறுவடையின்போது சிவப்பு எள்ளின் விலை சீராக இருக்கும் என்றும் செப்டம்பர்-டிசம்பர் 2012-ல் விலை குவிண்டாலுக்கு ரூ.5500-5800 வரை இருக்கும் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

**சின்ன வெங்காயம்**: செப்டம்பர்-அக்டோபர் 2012-ல் சந்தைக்கு வரும் ஆடிப்பட்ட (ஜூலை) வெங்காயத்தை விதைக்கலாமா, வேண்டாமா என்ற மனநிலையில் விவசாயிகள் உள்ளனர். விலை ஆய்வுகளின்படி செப்டம்பர்-அக்டோபர் 2012 அறுவடையின்போது வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவுக்கு ரூ.15-18 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த

விலைகளின் அடிப்படையில் விவசாயிகள் விதைக்கும் முடிவுகளை எடுக்கலாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**நிலக்கடலை:** ஆடிப்பட்ட நிலக்கடலை முக்கிய விதைப்பு பருவங்களில் ஒன்றாகும். உள்நாட்டு ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது ஆய்வு முடிவுகளின்படி அறுவடைக் காலத்தில் (அக்டோபர்-நவம்பர் 2012) எண்ணெய் பிரித்தெடுத்தல் நோக்கத்துக்காக நிலக்கடை பருப்பு கிலோ ரூ.46 முதல் 48 வரை விலை கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே, இந்த நிலவரத்தின் அடிப்படையில் விவசாயிகள் நிலக்கடலையைப் பயிரிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முட்டை விலை

First Published : 18 Jul 2012 11:53:53 AM IST

நாமக்கல், ஜூலை 17: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.70, சென்னையில் ரூ.2.80 கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த றிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.60, முட்டைக் கோழி கிலோ ரூ.38.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

## நறுமண பொருட்கள் ஏற்றுமதி ரூ.774 கோடியாக வளர்ச்சி

ஜூலை 19,2012,00:09



கொச்சி:கடந்த ஏப்ரல் மாதத்தில், நாட்டின் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி, 774 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, கடந்த 2011ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 564 கோடி ரூபாயாக இருந்தது. ஆக, மதிப்பின் அடிப்படையில், கடந்த ஏப்ரல் மாதத்தில், நறுமண பொருட்கள் ஏற்றுமதி, 37 சதவீதம் அதிகரித்துள்ளது.

**புள்ளி விவரம்:**இதே மாதங்களில், அளவின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, 49 சதவீதம் வளர்ச்சிகண்டு, 39,396 டன்னிலிருந்து, 58,685 டன்னாக அதிகரித்துள்ளது என, நறுமணப் பொருட்கள் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நடப்பு 2012-13ம் நிதியாண்டில், 5.66 லட்சம் டன் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி மூலம், 8,204 கோடி ரூபாய் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.கடந்த ஏப்ரல் மாதத்தில், 1,200 டன் மிளகு ஏற்றுமதியானது. இதன் மதிப்பு, 44.74 கோடி ரூபாயாகும். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில், இதன் ஏற்றுமதி, 2,266 டன் என்றளவிலும், இதன் மதிப்பு, 54.87 கோடி ரூபாயாகவும் இருந்தது.

**ஏலக்காய்:**ஆக, சென்ற ஏப்ரல் மாதத்தில், இதன் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 18 சதவீதம் என்றளவிலும், அளவின் அடிப்படையில், 47 சதவீதம் என்றளவிலும் குறைந்துள்ளது.இதே மாதங்களில், சிறிய ஏலக்காய் ஏற்றுமதி 120 டன்னாக இருந்தது. இதன் மதிப்பு, 9.98 கோடி ரூபாயாகும். பெரிய ஏலக்காய் ஏற்றுமதி, 100 டன்னாகவும், இதன் மதிப்பு, 6.57 கோடி ரூபாயாகவும் இருந்தது.

**மிளகாய்:**மிளகாய் ஏற்றுமதி, கடந்த ஏப்ரல் மாதத்தை விட, நடப்பாண்டு ஏப்ரல் மாதத்தில், அளவின் அடிப்படையில், 131 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில், 96 சதவீதம் அதிகரித்து முறையே, 30 ஆயிரம் டன் மற்றும் 231 கோடி ரூபாயாகவும் இருந்தது.இஞ்சி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 3 சதவீதம் வளர்ச்சிகண்டு, 2,500 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 15 சதவீதம் குறைந்து, 17.75 கோடி ரூபாயாகவும் இருந்தது.

**மஞ்சள்:** மஞ்சள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 1 சதவீதம் உயர்ந்து, 7,300 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 15 சதவீதம் குறைந்து, 41.25 கோடி ரூபாயாகவும் இருந்தது.கணக்கீட்டு மாதங்களில், தனியா ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 67 சதவீதம் வளர்ச்சிகண்டு, 2,600 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 65 சதவீதம் உயர்ந்து, 14.30 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

**வெந்தயம்**:வெந்தயம் ஏற்றுமதி அளவின் அடிப்படையில், 23 சதவீதம் உயர்ந்து, 875 டன்னாகவும்,மதிப்பின் அடிப் படையில் 1 சதவீதம் உயர்ந்து, 7.07 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.பூண்டு ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 133 சதவீதம் வளர்ச்சிகண்டு, 1,250 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 23 சதவீதம் அதிகரித்து, 3.12 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

**கரிமசாலா தூள்** :கரிமசாலா தூள்ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 19 சதவீதம் அதிகரித்து, 1,250 டன்னாகவும், மதிப்பின் அடிப் படையில், 22 சதவீதம் வளர்ச்சிகண்டு, 16.49 கோடி ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. நறுமண எண்ணெய் மற்றும் ஓலியோரெசின் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 23 சதவீதம் அதிகரித்து, 600 டன்னாகவும், மதிப்பின் அடிப் படையில், 44 சதவீதம் அதிகரித்து, 97.50 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

**புதினா:**புதினா ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 11 சதவீதம் வளர்ச்சிகண்டு, 1,000

டன்னாகவும், மதிப்பின் அடிப் படையில், 90 சதவீதம் அதிகரித்து, 198 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது என, நறுமணப் பொருட்கள் வாரியம் தெரிவித்துள் ளது.

## மரக்கன்று நடும் விழா

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,01:15 IST

கருத்தை பதிவு செய்ய

வேலூர்: வேலூர் மாநகராட்சியில் மரக்கன்று நடும் விழா நடந்தது.

தமிழகத்தை பசுமையாக மாற்றவும், காடுகளை வளர்க்கவும், 64 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாளில் துவங்கப்பட்டது. இதற்காக, 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றது.

வேலூர் மாநகராட்சியில் மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. மேயர் கார்த்தியாயினி தலைமை வகித்தார். அமைச்சர் பச்சை மால் மரக்கன்றுகள் நட்டார். துணை மேயர் தர்மலிங்கம், எம்.எல்.ஏ., தமிழரசன், மாவட்ட வன அலுவலர் மஞ்சுநாதன், மாநகராட்சி கமிஷனர் சீனி அஜ்மல் கான், வேலூர் கிழக்கு மாவட்ட மருத்துவ அணி இணை செயலாளர் டாக்டர் அனுஷ் குமார், தொழில் அதிபர் லோகேஷ் பாபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விதை நெல் தட்டுப்பாடுசெஞ்சி பகுதி விவசாயிகள் ஏமாற்றம்

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,03:22 IST

கருத்தை பதிவு செய்ய

செஞ்சி:வல்லம் வேளாண்மை அலுவலகத்தில் விதை நெல் கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். செஞ்சி பகுதி விவசாயிகள் ஆடி பட்டத்திற்கு நாற்று விடுவதற்கு விதை நெல் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதில் பொன்னி நெல் நடவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். செஞ்சி பகுதி கடைகளில் பொன்னி நெல் விதை 30 கிலோ 800 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.செஞ்சி வேளாண்மை விரிவாக்க மையத்தில் கடந்த 17ம் தேதி வரை 50 கிலோ பொன்னி விதை நெல் 900 ரூபாய் என விற்பனை செய்தனர். நேற்று இங்கும் இருப்பு தீர்ந்துள்ளது.வல்லத்தில் வேளாண்மை விரிவாக்க மையத்தில் நேற்று நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பொன்னி விதை நெல் வாங்க வந்தனர். இவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் விதை நெல் வழங்கினர்.மற்றவர்களுக்கு இருப்பு இல்லை என திருப்பி அனுப்பினர். விவசாயிகள் திரும்பி செல்லாமல் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அத்துடன் செஞ்சியில் 50 கிலோ 900 ரூபாய்க்கு விற்பனை செய்த நிலையில் வல்லத்தில் 1,250க்கு விற்பனை செய்தனர். இது குறித்தும் விவசாயிகள் வாக்குவாதம் செய்தனர்.இது குறித்து வல்லம் உதவி வேளாண்மை அலுவலர் ரவி கூறுகையில், கடந்த ஆண்டு 10 டன் அளவிற்கே பொன்னி விதை விற்பனையானது. இந்த ஆண்டு இதுவரை 24 டன் விற்பனையாகி உள்ளது. எதிர்பார்த்ததை விட கூடுதலாக தேவை ஏற்பட்டதால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.செஞ்சியில் விதை கிராமம் திட்டத்தில் 900 ரூபாய்க்கு 50 கிலோ விற்பனை செய்கின்றனர். வல்லத்தில் இந்த திட்டம்

இல்லை. இதனால் 1,250 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம் என்றார்.ஒரே தாலுகாவில் 9 கி.மீ., தூரத்தில் உள்ள ஒரே துறையின் இரண்டு அலுவலகங்களில் வெவ்வேறு விலையில் விதைகளை விற்பனை செய்வது விவசாயிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

## விதைச் சான்று நடைமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,02:59 IST

நாமக்கல்: அட்மா திட்டத்தின் கீழ் உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறை மூலம், தரமான சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதற்கு, தொழில் நுட்பம் மற்றும் விதை சான்று நடைமுறைகள் குறித்த பயிற்சி முகாம், பரமத்தியில் நடந்தது.
மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) நடராஜன் தலைமை வகித்து, தரமான விதை உற்பத்தியின் நோக்கம் மற்றும் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.
நல்ல தரமான விதை என்பது சிறந்த முளைப்புத்திறன், இனத்தூய்மை, புறத்தூய்மை கொண்டாதாகவும், கலவன்கள் அற்றதாகவும், அளவான ஈரப்பதம் உள்ளதாகவும், பூச்சி நோய் தாக்குதலற்றதாகவும் இருக்கும் என எடுத்துரைக்கப்பட்டது.
சந்தியூர் வேளாண் பல்கலை இணைப்பேராசிரியர் ஜெகதாம்பாள், வேளாண் அறிவியல் நிலைய செயல்பாடுகள் பற்றியும், கருவிதை, வல்லுனர் விதை, ஆதார விதை, சான்று விதை எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது என்பது பற்றியும், அதற்கு அரசு அளிக்கும் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.
விதை ஆய்வாளர் ராஜேந்திரன், அலுவலர் கந்தசாமி, முருகேசன் ஆகியோர் விதை சான்றின் தன்மை குறித்து பேசினர். துணை வேளாண் அலுவலர் மாதேஸ்வரன், அரசு மூலம் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் குறித்து விளக்கினார். பரமத்தி, கபிலர்மலை வட்டாரத்தை சேர்ந்த விதைப்பண்ணை உற்பத்தியாளர்கள், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## அட்மா திட்டத்தில் விவசாயிக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,03:00 IST

கருத்தை பதிவு செய்ய

ராசிபுரம்: அட்மா திட்டத்தில், ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை பகுதி விவசாயிகள் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
இந்த ஆண்டின் அட்மா திட்டத்தின் கீழ், டி.பச்சுடையாம்பாளையம், ஆர்.புதுப்பட்டி,

கரியாம்பட்டி, நாவல்பட்டி, கார்கூடல்பட்டி, ஊனாந்தாங்கல் ஆகிய பகுதிகளை சேர்ந்த, 54 விவசாயிகள், உடுமலைப்பேட்டை அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்குள்ள இர்ரிகேஷன் சிஸ்டம் நிறுவனத்தில், அடர் நடவு, மா, கொய்யா, மாதுளை போன்ற பழமரக்கன்றுகள் குறித்தும், திசு, வாழை, கரும்பு, துவரை ஆகிய பயிர்களின் சாகுபடி குறித்தும் விளக்கப்பட்டது. மேலும், சொட்டு நீர் பாசனத்தின் முறைகள், அதன் பயன்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

துணை தோட்டக்கலை உதவி அலுவலர் ராமசாமி, உதவி தோட்டக்கலை அலுவலர் சரவணன், அட்மா தொழில் நுட்ப மேலாளர் சுந்தரராஜன், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## காளான் வளர்ப்பு குறித்து பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,00:54 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி அடுத்த பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு குறித்த இரு நாள் பயிற்சி, கோவை வேளாண் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவர்கள் சார்பில் நடந்தது.

பேராசிரியர் தமிழ்செல்வன் தலைமை வகித்தார். கோவை வேளாண் பல்கலைக்கழக இளம்கலை நான்காம் ஆண்டு மாணவர்கள் காளான்கள் வகைகள் குறித்தும், அதன் வளர்ப்பு சூழ்நிலை, சுத்தமான வைக்கோலை சிறு, சிறு துண்டாக வெட்டி பாலித்தீன் பைகளில் படுக்கை அமைக்கும் முறைகளையும், காளான் குடில் அமைக்கும் முறையும், ஒரு காளான் புட்டியில் இருந்து ஐந்து கிலோ காளான் அறுவடை செய்வதை பற்றியும் விளக்கமாக எடுத்து கூறினர்.

ஒரு கிலோ காளான் சந்தையில், 110 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதையும், சந்தைப்படுத்துதல் குறித்தும் குறுபடங்கள் மூலம் விளக்கினர். பயிற்சி இரண்டாம் நாளில், பேராசிரியர் ஜான்சிராணி, காளானின் ஊறுகாய், காளான் சூப், காளான் பிரியாணி, பப்ஸ், சில்லி, குறுமா, இட்டி பொடி தயாரித்தல் உள்ளிட்ட காளான் மூலம் மதிப்பு கூட்டப்படும் பொருட்கள் தயாரிப்பது குறித்து செயல் விளக்கத்துடன் செய்து காட்டினார்.

காளான் வளர்ப்பில் முன்னோடியான பாலக்கோடு வட்டாரத்தை சேர்ந்த சாந்தலிங்கம், காளான் வளர்ப்பில் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் வியாபார ரீதியாக காளான் விற்பனை செய்வது குறித்த தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

தொழில் முனைவோர் வெங்கடேசன், காளான் உணவு வகைள் பற்றியும், தற்போது, விரும்பி சாப்பிடும் காளான் மூலம் தயார் செய்யப்படும் விற்பனை பொருட்கள் குறித்தும் விளக்கினார். மகளிர் சுய உதவிக்குழுவினர், விவசாயிகள், தொழில் முனைவோர் பங்கேற்றனர்.

## தொடரும் மழையால் தக்காளி விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,00:59 IST

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடரும் மழையால், மீண்டும் தக்காளி விலை உயர்ந்துள்ளது.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை, தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம், போச்சம்பள்ளி, பர்கூர் உட்பட மாவட்டம் முழுவதும், 10 ஆயிரம் ஏக்கரில், தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தியாகும் தக்காளியை விவசாயிகள் ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மற்றும் போச்சம்பள்ளியில் ஆகிய பகுதிகளில் உள்ள தக்காளி சந்தைகள் மூலம் விற்பனை செய்கின்றனர்.
இங்கிருந்து விவசாயிகளிடம் வாங்கும் தக்காளியை வியாபாரிகள் சென்னை, கோவை, வத்தலகுண்டு, ஒட்டசத்திரம், மதுரை உள்ளிட்ட பகுதிகளுக்கும், ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களுக்கும் விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மே, ஜூன் மாதங்களில் தக்காளி வரத்து அதிகளவில் இருக்கும். இதனால் இந்த மாதங்களில் தக்காளி விலை மிககுறைவாக இருக்கும். இந்தாண்டு மே, ஜூன் மாதங்களில் மாவட்டத்தில் தக்காளி உற்பத்தி குறைந்ததால் 15 கிலோ கொண்ட தக்காளி கூடை 200 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. உற்பத்தி குறைந்தாலும் இம்மாதங்களில் தக்காளிக்கு நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.
இந்த நிலையில் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பருவ மழை தொடர்ந்து பெய்து வருவதால் தக்காளி உற்பத்தி மேலும் குறைந்துள்ளதால் சந்தைக்கு தக்காளி வரத்து மேலும் குறைந்தது. தற்போது, தக்காளி விலை உயர்ந்து 15 கிலோ கொண்ட தக்காளி கூடை 300 ரூபாய் முதல் 350 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதை வாங்கி செல்லும் வியாபாரிகள் கடைகள் மற்றும் சந்தைகளில் ஒரு கிலோ தக்காளி 28 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.
தக்காளிக்கு இந்தாண்டு இது வரை தெடர்ந்து நல்ல விலை கிடைத்து வருவாதல் தக்காளி சாகுபடியை அதிகரிக்க உள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

## மஞ்சளே வராத போதும் கொள்முதல் தேதி நீட்டிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,02:52 IST

ஈரோடு: "டான்பெட்' மூலம் துவங்கப்பட்ட மஞ்சள் கொள்முதல் நிலையங்களில், அரசு நிர்ணயம் செய்த குறைந்தபட்ச விலை மற்றும் கடுமையான நிபந்தனைகளால், ஒரு குவிண்டால் கூட மஞ்சள் கொள்முதல் செய்யப்படவில்லை. எனினும், 31ம் தேதி வரை மஞ்சள் கொள்முதல் தேதி நீட்டிக்கப்பட்டுள்ளது.
மஞ்சள் விலை வீழ்ச்சியில் இருந்து விவசாயிகளை காப்பாற்றும் வகையில், நியாயமான விலையை அரசே நிர்ணயித்து, மஞ்சள் கொள்முதல் செய்ய வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதன்பேரில், அரசு அங்காடி தலையீட்டுத் திட்டம்- 2012ன் படி, மஞ்சளுக்கு ஒரு குவிண்டாலுக்கு, 4,000 ரூபாய் வீதம், தமிழக அரசு விலை நிர்ணயம் செய்து, "டான்பெட்' மூலம், ஜூன், 28ம் தேதி மஞ்சள் கொள்முதலை துவக்கியது. ஈரோடு, கோபி மற்றும் சத்தி கூட்டுறவு விற்பனை மையங்களில் மஞ்சள் கொள்முதல் நடந்தது.

இத்திட்டம் துவங்குவதற்கு முன், ஜூன், 27ம் தேதி வரை குவிண்டாலுக்கு அதிகபட்சம், 3,500 ரூபாய்க்கும் குறைவாகவே மஞ்சள் விற்றது. ஆனால், 4,000 ரூபாயாக அரசு விலை நிர்ணயம் செய்ததால், வெளிச்சந்தையிலும் விலை உயர்ந்தது. படிப்படியாக மஞ்சள் விலை உயர்ந்து, நேற்று முன்தினம் விரலி குவிண்டால், 5,700 ரூபாய் வரை விற்பனையானது.
அதேவேளை, "டான்பெட்' கொள்முதல் மையங்களில், 4,000, ரூபாய் மட்டுமே விலை தரப்பட்டதாலும், விவசாயிகள் யாரும் ஒரு குவிண்டால் கூட விற்பனை செய்ய முன்வரவில்லை. இதுதவிர, மஞ்சள் கொள்முதலுக்கு பல்வேறு விதிமுறைகளை அரசு நிர்ணயித்தது. மஞ்சளின் நீளம், 30 மில்லி மீட்டராக இருக்க வேண்டும். 10 சதவீதத்துக்கு மேல் குருணை மஞ்சள் இருந்தால் ஏற்றுக்கொள்ள முடியாது. கிழங்கு மஞ்சளை வாங்க முடியாது. குவிண்டால், 4,000 ரூபாய் மட்டுமே கொடுக்க முடியும்' என்ற கடுமையான நிபந்தனைகளால், விவசாயிகள் அதிருப்தியடைந்தனர்.
வெளிமார்க்கெட்டில் குவிண்டாலுக்கு, 1,700, ரூபாய் வரை மஞ்சள் விலை போவதால், அரசு கொள்முதல் மையங்களில் விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. "டான்பெட்' மூலம், ஈரோடு மாவட்டத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள் கூட கொள்முதல் செய்யப்படாத நிலையில், ஜூலை, 31ம் தேதி வரை விவசாயிகளிடமிருந்து மஞ்சள் கொள்முதல் தேதி நீட்டிக்கப்பட்டுள்ளதாக, தமிழ்நாடு விற்பனை கூட்டுறவு இணைய நிர்வாகி அறிவித்துள்ளார்.

## மீன் விலை உயர்த்த வியாபாரிகள் முடிவு

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,02:52 IST

ஈரோடு: ஈரோடு மாநகரில் அடுத்த வாரம் முதல் மீன் வகைகள் கிலோவுக்கு, 10 ரூபாய் வரை உயர்த்தப்பட உள்ளது.
ஈரோடு மாநகரில் ஸ்டோனி பிரிட்ஜ், காவிரி ரோடு மற்றும் மாணிக்கம் தியேட்டர் பகுதியில், மீன் மொத்த வியாபாரக் கடைகள் செயல்படுகின்றன. கடல் மீன் மற்றும் அணை மீன்கள் விற்கப்படுகின்றன. வாரத்துக்கு, 10 லோடு அணை மீன் வரத்தாகிறது. கட்லா, ரோகு மீன்கள் கிலோ, 80 ரூபாய், ஜிலேபி, 50 - 60ரூபாய், பங்காஸ் (கெலுத்தி) 75 ரூபாய்க்கு சில்லரை விலையில் விற்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளாக முடிந்த வரை சீரான விலையில் விற்பனை நடந்தது.
பெட்ரோல், டீஸல் விலையேற்றம் காரணமாக அடுத்த வாரம் முதல் விலை உயர்த்த, மீன் விற்பனையாளர்கள் முடிவெடுத்துள்ளனர். அதன்படி, கட்லா, ரோகு, 90 ரூபாய், ஜிலேபி, 70 ரூபாய், பங்காஸ், 80 ரூபாய்க்கு விற்கப்பட உள்ளது.
காவிரி ரோடு மீன் வியாபாரி செந்தில், ""பல்வேறு செலவினங்கள் உயர்வால், மீன் விலையை அடுத்த வாரம், 10 ரூபாய் வரை உயர்த்துகிறோம். கடல் மீன்களான வஞ்சரம், வாலர், மத்தி, கிழங்கன், சங்கரம் உள்ளிட்டவையும் உயர வாய்ப்புள்ளது,'' என்றார்.

## காவிரி டெல்டா பாசன மாவட்டங்களுக்கு சப்ளை! : தஞ்சைக்கு 2,643 உர மூட்டைகள் வந்தது

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,01:17 IST

தஞ்சாவூர்: தஞ்சை ரயில்வே ஸ்டேஷனில், காவிரி டெல்டா பாசன மாவட்டங்களுக்காக ரயில் மூலம் 42 வேகன்களில் 2,643 டன் உர மூட்டைகள் நேற்று வந்திறங்கியது. இங்கிருந்து லாரிகள் மூலம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க குடோன்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

காவிரி டெல்டா பாசன மாவட்டங்களான நாகை, திருவாரூர், தஞ்சை உள்ளிட்ட பகுதிகளில் தற்போது, மேட்டூர் அணை தண்ணீர் கிடைக்கப்பெறாத நிலையில் போர்வெல் மூலம் தண்ணீர் இறைத்து, நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்ள விவசாயிகள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இம்மாவட்டங்களுக்கு தேவையான உரத்தேவையை பூர்த்தி செய்வதற்காக ஒரிசா மாநிலம், பாரதீப் பகுதியிலுள்ள இப்கோ (இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம்) உரத்தொழிற்சாலையிலிருந்து உர மூட்டைகள் 42 ரயில்வே வேகன்களில் நேற்றுக்காலை ஆறு மணிக்கு தஞ்சை ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திறங்கியது.

இதுகுறித்து, இப்கோ நிறுவன திருச்சி மண்டல மேலாளர் சுப்பிரமணியன் கூறியதாவது:

டெல்டா பாசன மாவட்டங்களான நாகை, திருவாரூர், தஞ்சை உள்ளிட்ட பகுதி விவசாயப்பணிகளில் உரத்தேவையை கவனத்தில் கொண்டு, ஒடிசாவிலுள்ள இப்கோ உரத்தொழிற்சாலையிலிருந்து கடந்த நான்கு நாட்களுக்கு முன் 42 வேகன்களில் 2,643 டன் உரமூட்டைகள் ரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

இவை, தஞ்சை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து, லாரிகள் மூலம் மேற்கண்ட மாவட்டங்களிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க குடோன்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இப்கோ காம்ப்ளக்ஸ் வகை உரம் 1,320 டன்களும், இப்கோ டி.ஏ.பி., வகை உரம் 1,323 டன்களும் என, மொத்தம் 2,643 டன் உரங்கள் வரவழைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, தற்போது தஞ்சை பகுதிக்கு முதன்முதலாக நீரில் கரையும் புதிய வகையான மூன்று உரங்கள் இப்கோ 17:44:0, இப்கோ 18:18:18 மற்றும் இப்கோ சல்பேட் ஆப் பொட்டாஷ் ஆகியவை அறிமுகப்படுத்தப்படுகிறது. இவ்வகை உரங்களும் ரயில்மூலம் தற்போது வரவழைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர் கூறினார்.

இதைத்தொடர்ந்து, தண்ணீரில் கரையும் இலைவழி புதிய உரங்கள் குறித்த விளக்க கையேட்டை தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணைய துணைப்பதிவாளர் மற்றும் செயலாளர் சத்தியமூர்த்தி வெளியிட, அதை தஞ்சை கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் நந்தகுமார் பெற்றுக்கொண்டார்.

இதில், இப்கோ கள அலுவலர் பொம்மண்ணன், அக்கவுண்ட்ஸ் மேலாளர் பழனியப்பன், கூட்டுறவு விற்பனை இணைய மண்டல அலுவலர்கள் மணிமன்னன் (தஞ்சை), ராஜேந்திரன் (பட்டுக்கோட்டை) உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கரையும் புதிய உரம் அறிமுகம்

இப்கோ நிறுவன திருச்சி மண்டல மேலாளர் சுப்பிரமணியன் கூறியதாவது:

நீரில் கரையும் மூன்று வகை உரங்களை வழக்கமாக மண்ணில் தெளிப்பதற்கு பதிலாக இலைகளின் வழியாக நேரடியாக தெளித்து, நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களில் அதிக மகசூல் பெறலாம். மேலும் உரங்கள் வீணாகாது. அதிக செலவை கட்டுப்படுத்தலாம். சிறிய

அளவில் பேக்கிங்கில் கிடைப்பதால் எடுத்துச்செல்வது எளிது. பூச்சிக்கொல்லி, நோய்க்கொல்லி மருந்துகளுடன் கலந்து பயன்படுத்தலாம்.
பூ, பிஞ்சு உதிர்வதை தடுத்து, காய்கள் நீண்டநாள் கெடாமல் பாதுகாக்கும். இவ்வகை உரங்களை ஒரு கிலோவை, 100 லிட்டர் நல்ல தண்ணீருடன் கலந்து ஸ்பிரே மூலம் தெளிக்க வேண்டும். ஒரு கிலோ உரம் 60 ரூபாய் முதல் 64 ரூபாய் வரை குறைந்த விலைக்கு கிடைக்கிறது.
விவசாயிகள் இப்புதிய தண்ணீரில் கரையும் உரங்களை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

**பச்சை மிளகாய் விலையில் சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 19,2012,00:15 IST

கருத்தை பதிவு செய்ய
திண்டுக்கல்: திண்டுக்கல் காந்தி மார் க்கெட்டில் கடந்த வாரம் பச்சை மிளகாய் கிலோ 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இதுவரை இல்லாத விலை ஏற்றத்தினால் பச்சை மிளகாயை வாங்காமல் பலரும் பின்வாங்கினர். தற்போது வரத்து அதிகரித்திருப்பதால் கிலோ ரூ.25 க்கு விற்கப்படுகிறது.

---

தினகரன்

பால் கொள்முதல் விலையை குறைத்த தனியார் நிறுவனங்கள்

பதிவு செய்த நேரம்:2012-07-18 11:15:12

திருப்பூர், : திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தனியார் பால் கொள்முதல் நிறுவனங்கள் அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு பால் கொள்முதல் செய்வதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு குறைந்தபட்சம் ரூ.18 ஆக தமிழக அரசு நிர்ணயித்துள்ளது.பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு லிடடருக்கு ரூ.18 கொடுக்கப்படுகிறது. குறைந்தபட்ச கொள்முதல் விலை பாலில் உள்ள கொழுப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.
பாலில் 4 சதம முதல் 6 சதம் அளவு வரை கொழுப்பு சத்து இருக்கும்.4 சத அளவு கொழுப்பு சத்து உளள பாலுக்கு லிட்டருக்கு ரூ.18ம்,அதற்கு மேல் கொழுப்பு சத்து உளள பாலுக்கு லிட்டருக்கு ரூ.22 வரை அரசு விலை நிர்ணயித்துள்ளது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

 திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் விவசாய தொழிலின்அங்கமாக பால் மாடு வளர்ப்பு தொழில் உள்ளது. ஆவின் மூலம் இந்த மாவட்டங்களில் நாள்தோறும் 60ஆயிரம் முதல் 80ஆயிரம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அதே சமயத்தில் தனியார் பால் நிறுவனங்கள் நாள்தோறும் 50,000 முதல் 60,000 லிட்டர் வரை பால் கொள்முதல் செய்கின்றன.

 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத கிராமங்களில் கொள்முதல் மையம் அமைத்துள்ளது, குறிப்பிட்ட நாளில் பணம் பட்டுவாடா செய்வது போன்ற காரணங்களினால் தனியார் பால் கொள்முதல் நிறுவனங்களுக்கு விவசாயிகள் மத்தியில் வரவேற்பு உள்ளது. இந்நிலையில், திருப்பூர் மற்றும் கோவை மாவட்டத்தில உள்ள தனியார் பால் உற்பத்தி நிறுவனங்கள் கடந்த மே மாதம் முதல் பால் விலையை லிட்டருக்கு ரூ.2 வரை குறைத்துள்ளன.

 இதுகுறித்து தாராபுரத்தை சேர்ந்த பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்க நிர்வாகி  முருகானந்தம் கூறியது: தற்போது காற்றடி காலம் என்பதால் பால் உற்பத்தி குறைந்துவிட்டது. இந்த நேரத்தில் பால் கொள்முதல் விலையும் குறைக்கப்பட்டுள்ளதால் பால் உற்பத்தியாளர்கள் இழப்பை சந்திக்க வேண்டியுள்ளது.

 வறட்சி, தீவன விலையேற்றம் ஆகியவை கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. அரசு நிர்ணயித்துள்ள விலையே போதுமானதாக இல்லை என பால் உற்பத்தியாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதனால், பாலுக்கு அரசு நிர்ணயித்துள்ள தொகையை பெற்றுத்தரவு ம், கிராமங்களில் புதிதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை தொடங்கவும் மாவட்ட கலெக்டர் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்றார்.

 இதுகுறித்து ஆவின் அதிகாரிகளிடம் கேட்டபோது, திருப்பூரில் ஆவின நிறுவனத்தை தொடங்க அரசுக்கு கருத்துரு விரைவில் அனுப்பபடவுள்ளது. இதற்கான அனுமதியும் உடனடியாக கிடைக்க வாய்ப்புள்ளது. இங்கு ஆவின் நிறுவனம் தொடங்கப்படும் பட்சத்தில், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய கூடுதலாக சங்கஙகள் தொடங்கப்படும் என்றனர்.

## பயிருக்கு உரம் போட புதிய கருவி கண்டுபிடிப்பு கும்பகோணம் மெக்கானிக் சாதனை

பதிவு செய்த நேரம்:2012-07-18 11:08:26

கும்பகோணம், : கரும்பு, பருத்தி, சோளம், நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களுக்கு சுலபமான முறையில் அடியுரம் இடுவதற்கான கருவியை கும்ப கோணத்தை சேர்ந்தவர் கண்டுபிடித்துள்ளார். விவசாயத்தில் குறைந்த செலவில் அதிக மகசூல் எடுக்கும் வகையிலும், ஆள் பற்றாக்குறையால் விவசாய பணி பாதிக்கப்படுவதை தடுக்கவும் தஞ்சை மாவட் டம் கும்பகோணத்தை சேர்ந்த கார்த்திகேயன் என்பவர் நவீன தொழில்நுட்பத்துடன் மிகக்குறைந்த செலவில் புதிய வேளாண் கருவிகளை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். நெல் பயிரில் களை எடுக்கும் பவர் வீடர், கரும்பில் தோகையை சுத்தம் செய்ய, கரும்பை சிறிய கரணையாக வெட்ட குறைந்த முதலீட்டில் வேளாண் கருவிகளை இவர் வடிவமைத்துள்ளார். தமிழக அரசின் வேளாண் துறை மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு இந்த கருவிகளை வழங்கி வருகிறார்.

தற்போது அடியுரம் இடுவதற்காக ஒரு புதிய கருவியை கார்த்திகேயன் வடிவமைத்துள்ளார். நெல்,

கரும்பு, சோளம், நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு அடியுரமிட குறைந்தபட்சம் 3 ஆள் தேவைப்படும். ஆள் கிடைக்காத நிலையில் ஒருவரே உரமிடும் வகையில் ரூ.2,500 முதலீட்டில் 5 கிலோ எடை கொண்ட புதிய கருவியை கார்த்திகேயன் வடிவமைத்துள்ளார். இந்த கருவியின் மேல் பகுதியில் அடியுரத்தை இட்டு பயிர்களுக்கு அருகில் கருவியின் அடிப்பகுதியை வைத்து, மேலே உள்ள விசையை இயக்கினால் 5 செ.மீ ஆழம் வரை பூமிக்குள் உரம் சென்றடையும். வேருக்கு மிக அருகிலுள்ள உரத்தின் சத்தை பயிர்கள் எளிதில் உறிஞ்சி நன்கு வளரும். வேருக்கு அருகிலேயே உரம் கிடைப்பதால் பயிர்கள் செழித்து வளர்ந்து நல்ல கூடுதல் மகசூலை தரும்.

புதிய கருவி குறித்து கார்த்திகேயன் கூறுகையில், நான் விவசாய குடும்பத்தை சேர்ந்தவன். ஆட்டோமொபைல் மெக்கானிக் படித்திருக்கிறேன். விவசாயத்தின் மீதுள்ள நாட்டம் காரணமாக முன்பு பவர் வீடரை வடிவமைத்தேன். விவசாயம் தொடர்பான கருத்தரங்கம், கண்காட்சி உலகில் எங்கு நடந்தாலும் அங்கு சென்று கலந்துகொள்வேன். அண்மையில் இஸ்ரேல் நாட்டில் நடை பெற்ற உலகளாவிய விவசாய கண்காட்சியில் கலந்துகொண்டேன். நம் நாட்டில் விவசாயத்திற்கு தேவையான தொழிலாளர்கள் கிடைக்காததுதான் முக்கிய பிரச்னையாக உள்ளது. இதற்காக நாம் பயிருக்கு இடும் உரம் நேரடியாக பயிரை சென்றடையும் வகையில் செய்தால் அதன் வளர்ச்சியும், மகசூலும் அதிகரிக்கும் என்பதற்காக இந்த கருவியை வடிவமைத்தேன். பயிருக்கு அடியுரம் இடும் இக்கருவி விலை குறைவுதான். தேவைப்படும் விவசாயிகள் என்னை அணுகினால் கருவியை தயாரித்து வழங்க தயார். இந்த கருவி குறித்து வேளாண்மைத்துறை மூலம் பதிவு செய்துள்ளேன் என்றார்.

## 1300 டன் உர மூட்டைகள் கடலூருக்கு வந்தன

பதிவு செய்த நேரம்:2012-07-18 11:44:57

கடலூர்,: சென்னை எண்ணூரில் இருந்து 1300 டன் உரம் கடலூர் மாவட்டத்துக்கு ரயிலில் வந்தது. அவற்றை பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பும்பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். கடலூர் மாவட்டத்தில் பருவமழை தொடங்கி உள்ளது. கடந்த 2 நாட் களாக மழை விட்டு பெய்து வருவதால் விவசாயிகள் நாற்று விடுதல், நாற்று நடுதல் உள்ளிட்ட விவசாய பணிகளை தொடங்கி உள்ளனர். இதையடுத்து உரிமம் பெற்ற தனியார் உர விற்பனை நிலையங்களில் இருந்து தட்டுப்பாடு இல்லாமல் உர விநியோகம் செய்ய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. அதன்படி வேளாண்மைத்துறை உர விற்பனையை கண்காணித்து வருகிறது. இதற்கிடையே சென்னை எண்ணூரில் உள்ள பாரம்பாஸ் உர தொழிற்சாலையில் இருந்து 1300 டன் பாரம்பாஸ் உர மூட்டைகள் 30 பெட்டிகளில் கடலூர் முதுநகர் ரயில்நிலையத்துக்கு சரக்கு ரயிலில் வந்தன. அந்த உர மூட்டைகளை 250க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ரயில் பெட்டியில் இருந்து இறக்கி கடலூர், பண்ருட்டி, விருத்தாசலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். உர மூட்டைகள் வரத்து

அதிகரித்துள்ள தால் விவசாய பணிகளை மேலும் துரிதப்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## நிலம் கொடுத்தால் நிரந்தர நெல்கொள்முதல் நிலையம்

பதிவு செய்த நேரம்:2012-07-18 11:10:49

தஞ்சை, : தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலைய கட்டிடம் கட்ட தானமாக பட்டா காலி இடங்களை தரலாம் என தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

சட்டப்பேரவையில் 2012-13ம் நிதியாண்டிற்கான கூட்டத்தொடரில் கடந்த ஏப்ரல் 23ம் தேதி உணவுத்துறை அமைச்சர் பேசும்போது, தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களை உள்ளடக்கிய டெல்டா மாவட்டங்களில் 50 நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தலா ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும் என அறிவித்தார்.

இதன் மொத்த மதிப்பு ரூ.12.50 கோடி. எனவே, நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் இல்லாத, தற்காலிக கொள்முதல் நிலையம் செயல்பட்டு வரும் கிராமங்களில் பொதுமக்கள் தானமாக பட்டா காலி இடங்களை (சுமார் 40 சென்ட்) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தர முன்வந்தால் உடனடியாக நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டித் தரப்படும்.

எனவே, கிராம மக்கள் தங்களது விருப்பத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தஞ்சை, கும்பகோணம், பட்டுக்கோட்டை துணை மேலாளர்களிடமோ அல்லது தஞ்சை முதுநிலை மண்டல மேலாளரிடமோ கடிதம் மூலமாகவோ, நேரிலோ தெரிவிக்கலாம்.இவ்வாறு கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

---

## ***சென்ற ஜூன் மாதத்தில் சில்லரை விலை பணவீக்கம் 10.02 சதவீதமாக குறைந்தது***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் சில்லரை விலை பணவீக்கம் ஜூன் மாதத்தில் 10.02 சதவீதமாக சற்று குறைந்துள்ளது. இது, மே மாதத்தில் 10.36 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இந்த பணவீக்கம் 0.34 சதவீதம் குறைந்துள்ளது. இருப்பினும், உணவு தானியங்கள், சமையல் எண்ணெய் போன்றவற்றின் விலை அதிகரித்துள்ளது.

உணவு தானியங்கள்

சென்ற ஓர் ஆண்டில் காய்கறி உள்ளிட்ட உணவு பொருள்கள் விலை 27.60 சதவீதமும், சமையல் எண்ணெய் விலை 16.58 சதவீதம் உயர்ந்துள்ளது. பருப்பு வகைகள் விலை 9.34 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், பால் பொருள்கள் விலை 12.75 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 11.65 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, மே மாதத்தில் 10.66 சதவீதமாக இருந்த நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையில் உணவு பணவீக்கம் ஜூன் மாதத்தில் 10.71 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கத்துடன் ஒப்பிடும்போது, நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் மிகவும் துல்லியமானது என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நம் நாட்டில் மொத்த விலை பணவீக்கம் அடிப்படையில்தான் பாரத ரிசர்வ் வங்கி பணக் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வருகிறது. அதேசமயம், வெளிநாடுகளில் பெரும்பாலான ரிசர்வ் வங்கிகள் நுகர்வோர் விலை பணவீக்கத்தையே கணக்கில் எடுத்துக்கொள்கின்றன.

கிராமங்கள் – நகரங்கள்

நம் நாட்டில் 2012 ஜனவரியிலிருந்து மாதந்தோறும் நுகர்வோர் விலை பணவீக்கம் குறித்த புள்ளி விவரம் வெளியிடப்படுகிறது. இப்பணவீக்கம் கிராமம், நகரம் மற்றும் நாடு ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வெளியிடப்படுகிறது. கிராமங்களுக்கான நுகர்வோர் விலை பணவீக்கம் 9.57 சதவீதத்திலிருந்து 9.74 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதேசமயம், நகரங்களுக்கான இப்பணவீக்கம் 11.52 சதவீதத்திலிருந்து 10.44 சதவீதமாக குறைந்துள்ளது.

முக்கிய கடன் வட்டி

மே மாதத்தில் 7.55 சதவீதமாக இருந்த பொது பணவீக்கம் ஜூன் மாதத்தில் 7.25 சதவீதமாக குறைந்துள்ளது. எனவே, பாரத ரிசர்வ் வங்கி இம்மாதம் 31–ந் தேதி வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைக்க வாய்ப்புள்ளது என சில பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# வேளாண்மை செய்திகள்



# நவீன தொழில்நுட்பத்தில் காலிப்பிளவர் சாகுபடி

**பூலுவபட்டி விவசாயி சாதனை**

கோவையை அடுத்த தொண்டாமுத்தூர் வட்டாரம், பூலுவபட்டி கிராமம் டி.பி.எஸ்.தோட்டத்தைச் சேர்ந்த விவசாயி தங்கராஜ். இவர் தனது தோட்டத்தில் அரை ஏக்கர் நிலத்தில் வேர் உட்பூசணம் என்ற நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி காலிப்பிளவர் பயிரை சாகுபடி செய்து சாதனை படைத்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:-

## வேர் உட்பூசணம்

வேர் உட்பூசணம் நுண்ணுயிர் உரத்தில் மணிச்சத்து அதிகமாக உள்ளதாகவும், இதை பயன்படுத்தி காலிப்பிளவர் சாகுபடி செய்தால் அதிக விளைச்சல் மற்றும் பூக்களின் எடை அதிகமாக கிடைக்கும் என்றும் வேளாண் பல்கலைக்கழக நுண்ணுயிரியல் துறை அதிகாரிகள் கூறினார்கள். இதை கருத்தில் கொண்டு முதல் கட்டமாக பரிசோதனை முறையில் ½ ஏக்கர் நிலத்தில் காலிப்பிளவர் சாகுபடி செய்தேன். அந்த நிலத்தை 2 சமபாகமாக பிரித்து, அதில் சாதாரண முறையிலும், வேர் உட்பூசணம் முறையிலும் காலிப்பிளவர் சாகுபடி மேற்கொண்டேன்.

இதற்காக முதலில் நிலத்தை டிராக்டர் கலப்பை கொண்டு 4 முறை உழவு செய்தேன். அதை தொடர்ந்து 1½ அடிக்கு 1 அடி நீள அகலத்தில் பார் அமைத்தேன். இந்த பாரில் கிணற்று மண் தோற்றம் கொண்ட 5 கிலோ வேர் உட்பூசண நுண்ணுயிர் உரத்தை தெளித்தேன். அந்த உரம் மண்ணில் நன்றாக கலக்குமாறு நீர் பாய்ச்சினேன்.

## நாற்று நடவு

அதை தொடர்ந்து நாற்றுகளை நடவு செய்தேன். இதற்கு தேவையான 4 ஆயிரம் நாற்றுகளை அருகில் உள்ள பண்ணையில் இருந்து பெற்று வந்து நடவு செய்தேன். நடவு செய்யும் போது ஒரு முறையும், நடவு செய்த 3-ம் நாளும் தண்ணீர் பாய்ச்சினேன். இதை தொடர்ந்து 5 நாட்களுக்கு ஒரு தடவை நீர் பாய்ச்சினேன்.

இவ்வாறு நாற்றுகள் நன்றாக முளைத்து வந்த 20-ம் நாள் ஒரு களை எடுத்தேன். இவ்வாறு 5 முறை களை எடுத்தேன். களை எடுத்த பிறகு பயிர்கள் நன்கு முளைக்க டி.ஏ.பி., பொட்டாஷ் மற்றும் யூரியா ஆகியவற்றை இட்டேன். பயிருக்கு ஏற்பட்ட பூச்சி நோய் தாக்குதலை கட்டுபடுத்த 30-வது நாளில் புரோகராஸ் மற்றும் அஸ்பெட் மருந்தை தண்ணீரில் நன்கு கலந்து நீர் தெளிப்பான் மூலம் தெளித்தேன்.

## திரண்ட நிலையில் பூ

30-வது நாளில் 50 கிலோ பாக்டம் பாஸ் உரத்தையும், 45-வது நாளில் 1 மூட்டை சல்பேட் மற்றும் 1 மூட்டை பொட்டாஷ் ஆகியவற்றை உரமாக கொடுத்தேன். நாற்று நடவு செய்ததில் இருந்து 70 நாட்களில் செடிகள் நன்றாக முளைத்து வந்தது. இவ்வாறு வந்த செடியின் மேல்பகுதியில் காலிப்பிளவர் பூக்கள் நன்கு திரண்ட நிலையில் காணப்பட்டது.

இதை தொடர்ந்து அறுவடை மேற்கொண்டேன். முழுவதுமாக அறுவடை முடிந்த போது வேர் உட்பூசணம் மூலம் விளைந்த செடியில் 4 டன்னும், சாதாரண நிலையில் வளர்ந்த செடியில் 3 டன்னும் என 7 டன் காலிப்பிளவர் பூ கிடைத்தது.

## அறுவடை

வேர் உட்பூசணத்தை பயன்படுத்தி வளர்ந்த காலிப்பிளவர் செடியில் கிடைத்த பூவின் எடை 1½ கிலோவாகவும், சாதாரண நிலையில் வளர்ந்த காலிப்பிளவர் பூவின் எடை 1 கிலோவாகவும் இருந்தது. இவ்வாறு அறுவடை செய்த காலிப்பிளவர் பூக்களை கோவையில் உள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்தேன்.

வேர் உட்பூசணத்தில் விளைந்த காலிப்பிளவர் பூ ஒன்று ரூ.8 வீதம் விற்பனை ஆனது. அதன்படி 4 டன்னுக்கு சராசரியாக ரூ. 32 ஆயிரம் கிடைத்தது. நாற்று நடுதல், களை எடுத்தல், உரம் வைத்தல், பூச்சி மருந்து தெளித்தல் ஆகியவற்றுக்காக ரூ.14 ஆயிரம் செலவானது. அனைத்து செலவுகளும் போக ½ ஏக்கர் நிலத்தில் லாபமாக ரூ.19 ஆயிரம் கிடைத்தது. இதே போல் எனது தோட்டத்தில் வேர் உட்பூசண தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வெங்காயம் நடவு செய்து உள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆடிப்பட்டத்தில் அதிக விளைச்சல் தரும் தீவனப்பயிர் சாகுபடி

தமிழ்நாட்டின் 1.72 லட்சம் எக்டேர் பரப்பளவில் தீவனப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. நிரந்தர மேய்ச்சல் நிலம், புல்வெளி 1.14 லட்சம் எக்டேர் மட்டுமே உள்ளது. இதனால் பசுந்தீவன தேவையில் 20 சதவீத குறைபாடு உள்ளது.

தற்போதைய பால் உற்பத்தியின் வளர்ச்சி 4 சதவீதம் மட்டுமே. இதை 12-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் பால் உற்பத்தி வளர்ச்சி 7 சதவீதம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இலக்கை அடைய அதிக விளைச்சல் தரும் தீவனப்பயிர்களை சாகுபடி செய்வது அவசியம்.

## தீவனப்பயிர் சாகுபடி

கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், மறுதாம்பு சோளம், தீவன தட்டைப்பயறு ஆகியவை கரிப்பருவத்திற்கு ஏற்றவை. கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் 30-40 தூர்களுடன் சாயாத தன்மை கொண்டது. மிக மிருதுவாகவும், இனிப்பான சாறு நிறைந்த தண்டுகள், 0.71 என்ற அதிக இலை தண்டு விகிதம், விளைச்சல் 1 எக்டேருக்கு, ஆண்டுக்கு 400 டன் தர வல்லது.

கம்பு நேப்பியர் ஒட்டுப்புல்லை சாகுபடி செய்ய, நிலத்தை 2-3 முறை உழவு செய்து பண்படுத்தி 60 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். எக்கருக்கு இரு பரு கொண்ட விதைக்கரணைகள் 13,500 போதுமானது. 60 செ.மீ. இடைவெளியில் பார் அமைத்து செடிக்கு, செடி 50 செ.மீ. இடைவெளியில் விதைக்கரணைகளை ஒரு பரு மண்ணுக்குள் இருக்குமாறு பாரின் ஒரு பக்கத்தில் நேராக நட வேண்டும்.

## கம்பு நேப்பியர் ஒட்டுப்புல்

எக்கருக்கு கடைசி உழவின் போது 10 டன்கள் நன்கு மக்கிய தொழு உரம் இட வேண்டும். அடியுரமாக 30 கிலோ தழைச்சத்து, 20 மணிச்சத்து, 16 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். நடவு செய்த 30 நாட்கள் கழித்து, 30 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இட்டு, தண்ணீர் கட்ட வேண்டும். ஒவ்வொரு அறுவடைக்கு பின்னும் 30 கிலோ தழைச்சத்து இட வேண்டும்.

கரணைகளை நட்ட 3-வது நாள் உயிர் நீர்ப்பாய்ச்ச வேண்டும். பின்பு மண், தட்ப வெப்ப நிலைக்கேற்ப நீர் பாய்ச்சுதல் வேண்டும். நடவு செய்த 30 நாட்களில் தோன்றும் களைகளை கைகளால் அகற்றிவிட வேண்டும். அதன்பின்னர் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் அடர்த்தியாக வளர்வதால் களைகள் முளைப்பதில்லை. 80 நாட்கள் முதல் அறுவடை செய்யலாம். 45-50 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்து மிருதுவான பசுந்தீவனத்தை பெறலாம்.

## மறுதாம்பு சாகுபடி

மறுதாம்பு சாகுபடிக்கு மிகவும் உகந்தது. ஆண்டுக்கு 6-7 முறை அறுவடை செய்யலாம். சத்துக்கள் 24 சதவீதமும், ஜீரணிக்கும் திறன் 88.4 சதவீதமும் உள்ளது. சுவை அதிகமாக இருப்பதால் கால்நடைகள் விரும்பு உண்ணும். சாகுபடிக்கு முன் நிலத்தை 2-3 முறை உழவு செய்து பண்படுத்தி 60 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும்.

எக்கருக்கு 2 கிலோ விதைகள் என்ற அளவில் பார்களின் இரு பக்கமும் செடிக்கு, செடி 10 செ.மீ. இடைவெளியில் விதைகளை விதைக்க வேண்டும். அசோஸ்பைரில்லம் 3 பாக்கெட் (600 கிராம்) எடுத்து விதை நேர்த்தி செய்து விதைப்பது நல்லது. கடைசி உழவின் எக்கருக்கு 5 டன் தொழு உரம் இட வேண்டும்.

## சாகுபடி முறைகள்

அடியுரமாக 18 கிலோ தழைச்சத்து, 16 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். விதைத்த 30 நாட்கள் கழித்து எக்கருக்கு 18 கிலோ தழைச்சத்தும், ஒவ்வொரு அறுவடைக்கு பின்னும் 18 கிலோ தழைச்சத்தும் இட வேண்டும். விதைத்த 20 நாட்களில் களை எடுக்க வேண்டும். தேவைப்பட்டால் 35-40 நாட்களில் 2-வது முறையாக களை எடுக்கலாம்.

விதைத்தவுடன் நீர்ப்பாய்ச்ச வேண்டும். பின்பு மண், தட்ப வெப்ப நிலைக்கேற்ப நீர் பாய்ச்சுதல் வேண்டும். 70 நாட்களில் அறுவடை செய்யலாம். பிறகு ஒவ்வொரு மறுதாம்பு பயிரும் 45 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்யலாம். வளர்ச்சி பருவத்தில் ஹைட்ரஜன் சைனைடு என்ற நச்சுப்பொருள் அதிகம் இருப்பதால், பூ வந்த பின்பு அறுவடை செய்து கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும். ஆண்டுக்கு 6-7 முறை அறுவடை செய்யலாம். எக்கருக்கு 68 டன் பசுந்தீவனம் மகசூலாக கிடைக்கும்.

-தகவல்: வேலாயுதம், பாபு, கலாமணி, தீவப்பயிர்துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை.